# AHEAD செயற்திட்டம்

## இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

## விலை மனுக்கோரல் (IFB)

## கற்பித்தல் மற்றும் அலுவலக உபகரணங்களை வழங்கல்

---

**IFB NO: AHEAD/CITIES/OUSL/NCB/GOODs/2022/01**

1. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் AHEAD செயற்திட்டத்தின் சார்பாக தலைவர், திணைக்கள பெறுகை குழு (பல்கலைக்கழகம்) அவர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய மடிக் கணினிகளை விநியோகித்தல், வழங்குதல், என்பவற்றிற்காக தகுதிவாய்ந்த மற்றும் தகைமையுடைய மனுதாரர்களிடம் இருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை தற்போது அழைக்கின்றார்.

| Item No | Item’s Name | No of Units | Bid Security (SLRS) |
|---|---|---|---|
| 01 | High-End Laptop Computers. | 43 | 240,800.00 |
| 02 | High-End Laptop Computers with a dedicated graphic card. | 07 | 42,000.00 |
| 03 | Smart Digital Panel | 12 | 144,000.00 |
| 04 | Video Conferencing Systems (Camera, Mic, Speakers etc.)- | 09 | 90,000.00 |
| 05 | Headset for computers. | 385 | 34,400.00 |
| 06 | Headset for computers for video recording of lecturers. | 25 | 6,000.00 |

2. மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் தொகைகளுக்கான அனைத்து விலைமனு ஆவணங்களும் அவ் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் வடிவிலான வங்கிப் பிணைகளை கொண்டிருத்தல் வேண்டும். வங்கிப் பிணையானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வங்கி ஒன்றிலிருந்து பெறப்பட்டிருத்தல் வேண்டும். வங்கி பிணையானது கோரப்படும் போது நிபந்தனையற்றதாகவும் **15/06/2022** வரை செல்லுபடியானதாகவும் இருத்தல் வேண்டும்.

3. தேசிய போட்டி விலை மனுக்கோரல் ஊடாக விலைமனுக்கோரல் இடம்பெறும்.

4. மேற்குறிப்பிட்ட உபகரணத்தினை விநியோகித்தல், வழங்குதல் போன்றவற்றில் ஆகக் குறைந்தது **3 வருட** அனுபவங்களையாவது கொண்டிருக்கும், அரச அல்லது தனியார் நிறுவனங்களுக்கு சம

அளவையுடைய வழங்கல்களை மேற்கொள்ளும் மனுதாரர்கள் இதற்கான மனுக்களை சமர்ப்பிக்கலாம்.

5. ஆர்வமுள்ள மனுதாரர்கள் பிரதி பணிப்பாளர் பெறுகை, AHEAD செயற்திட்டம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் (தொ.பே: Tel: 011-2881127/011-2881212) இடம் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அலுவலக நேரங்களில் அதே முகவரியில் விலைமனுக்களை கட்டணமேதும் செலுத்தாது பார்வையிடமுடியும்.

6. ஆர்வமுள்ள மனுதாரர்கள் எழுத்து மூலமான விண்ணப்பப் படிவத்தினை பிரதி பணிப்பாளர் பெறுகை, AHEAD செயற்திட்டம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் எனும் முகவரியில் சமர்ப்பிப்பதன் மூலம் **07/02/2022** முதல் **28/02/2022** வரையிலான வேலைநாட்களில் மு.ப.9.00 மணியிலிருந்து பி.ப3.00 மணிவரை மீளச்செலுத்தமுடியாத வைப்புத் தொகையான ரூ.3,500.00 இனை பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி ஆங்கில மொழியில் காணப்படும் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியினைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். விலைமனுக்கோரல் ஆவணங்களை www.ou.ac.lk எனும் பல்கலைக்கழக இணையத்தளத்தில் பரிசீலிக்கலாம்.

7. மேற் குறிப்பிடப்பட்ட கேள்விப் பத்திரத்திற்கான இவ்விலைமனுக்கோரல் ஆவணங்களை www.ou.ac.lk எனும் பல்கலைக்கழக இணையத்தளத்திலும் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும். விலை மனுக்கோரல் ஆவணங்களை பல்கலைக்கழக இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்வோர் மீளச்செலுத்த முடியாத தொகையாகிய ரூ.3,500.00 இனை பல்கலைக்கழக "நிதியாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்" எனும் பெயரில் வைப்புச் செய்து அதற்கான வங்கி வரைவோலையினையுடன் கேள்விப் பத்திரத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.

8. விலைமனுப்பத்திரங்கள் முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்டு "மூலப் பிரதி" மற்றும் "நகல்பிரதி" என குறிப்பிட்டு, இரு வெவ்வேறு கடித உறைகளில் இடப்பட்டு பின்னர் அவை ஒரே கடித உறைகளில் இடப்படல் வேண்டும். மூன்று கடித உறைகளிலும் முத்திரையிடப்பட்டு இடது பக்கமேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியன எழுதப்பட்டு "தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, AHEAD செயற்திட்டம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட" எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழக விநியோக பிரிவில் வைக்கப்பட்டிருக்கும் விலைமனுக்கோரல் பெட்டியில் இடப்படல்வேண்டும். நகல் ஆவணங்கள் மூல ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளாக இருத்தல் வேண்டும்.

9. **02/03/2022** அன்று பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு விலைமனுக்கள் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்ததுடன் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் மனுதாரர் அல்லது அவர்களுடைய அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விகள் திறக்கப்படும் போது சமுகமளிக்க முடியும்.

10. முன்-விலைமனுக்கோரல் கூட்டமானது **17/02/2022** அன்று பி.ப. 02.00 மணிக்கு Zoom தொழிநுட்பம் மூலம் இடம் பெறும்..

11. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உண்டு.

தலைவர்
செயற்திட்ட பெறுகை குழு( பல்கலைக்கழகம்)
AHEAD செயற்றிட்டம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,
நாவல, நுகேகொட.